දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832 / 2784807 / 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 / **Fax**: 2784846

ඊමේල්/ மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No } ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

"ඉසුරුපාය", ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/1/1/5/3

දිනය / திகதி / Date } 2016. 04. 07

**சுற்றறிக்கை இலக்கம் 2016 / 11**

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான ப.க.ப / உ.க.ப,
சகல அதிபர்கள்

## பாடசாலைப் பிள்ளைகளுக்காக திரைப்படக் காட்சிகளைப் பரிந்துரை செய்தல்

திரைப்படம் பலம் பொருந்திய கலை, கல்வி மற்றும் தொடர்புசாதன ஊடகம் என்பதனால் பண்புசார் தரத்தைக் கொண்ட அதிசிறந்த திரைப்படங்களைப் பாடசாலை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துவதன் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை கல்வி அமைச்சு இனங்கண்டுள்ளது. இதற்கமைய கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமான திரைப்படக் காட்சிகளைப் பார்வையிடுவதற்காகப் பரிந்துரை செய்தல் மற்றும் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

இதற்கு முன்னர் வெளித்தரப்பினர்களுக்கு பாடசாலை மாணவர்களுக்காக நாடகங்கள் மற்றும் திரைப்படங்களைக் காட்சிப்படுத்தல் அல்லது அவ்வாறான வேலைத்திட்டங்களை நடாத்துதல் என்பதற்கான தொனிப்பொருளில் கல்விச் செயலாளரின் ஒப்பத்துடன் 2012.05.17 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2012/16 கொண்ட சுற்றறிக்கை இத்தால் இரத்து செய்யப்படுவதுடன் திரைப்படங்கள் தொடர்பில் 2016.01.01 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பின் அச்சகல அங்கீகாரங்களுடன் இத்தால் இரத்து செய்யப்படுகின்றது. மேலும் பிள்ளைகளுக்கு திரைப்பட ஆக்கங்களைப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கும் வகையில் நிறுவனம் என்ற ரீதியில் பாடசாலையின் தலையீடு சார்ந்தவைகளுக்கு மாத்திரம் இந்நிபந்தனைகள் உரியதாகின்றன.

1.1. மாணவர்கள் பார்வையிடுவதற்கு பொருத்தமானது என கல்வி அமைச்சு பரிந்துரைக்கும் அத்தியாசிய பண்புசார் தரங்கள்

1.1. இத்திரைப்படங்கள் மாணவர்களின் வயதெல்லை மட்டங்களுக்கு ஏற்றவாறு உரிய விடயப் பரப்புக்களை உள்ளடங்கியதாக இருத்தல் வேண்டும்.

1.2. சிறந்த மனிதாபிமானப் பெறுமதிகள் தொடர்பில் சிறந்த சிந்தனைகள் கொண்ட பிள்ளைகளுக்கு அவர்களின் சமநிலை ஆளுமையினை விருத்தி செய்வதற்காக உதவக்கூடிய இரசனையினை விருத்தி செய்யக்கூடிய கலைசார் மற்றும் பண்புசார் தரத்தினை விட அதிகமான ஆக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1.3. திரைப்பட ஆக்கங்கள் வெறுமனே மாணவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என வாதிடக்கூடிய முறையில் கல்விசார் விடயங்கள், ஆலோசனைகள் அல்லது தகவல்கள் அல்லது சம்பவங்களின் உள்ளடக்கம் மாத்திரம் அது பிள்ளைகளுக்கு பார்வையிடுவதற்கு பொருத்தமான கல்வி அமைச்சின்

பரிந்துரைகளுக்குட்டுவதற்கு பொருத்தமான காரணங்கள் இல்லை இவ் உள்ளடக்கத்தின் மூலம் கலைசார் மற்றும் அழகியல் தரங்கள் அதிஉயரிய மட்டத்திலான திரைப்படங்கள் ஊடாக சமர்ப்பிப்பது கட்டாய நிபந்தனையாகும்.

1.4. நடனம் அதிஉயரிய மட்டத்தைக் கொண்டிருக்க வேண்டியதுடன் ஏனைய அதுசார்ந்த அம்சங்களும் உயரிய மட்டத்தில் இருக்க வேண்டும்.

1.5. இச்சகல ஆக்கங்களும் பாடசாலை முறைமையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளுக்குப் பாதிப்புக் கொண்டதாக இருக்கக்கூடாது.

1.6. கலாசார மற்றும் சமூக ரீதியில் பொருத்தமற்ற மொழி இன்றி இருக்க வேண்டும்.

1.7. போதைப் பொருள் மற்றும் புகைத்தல் பயன்பாடுகள், கொலைகள் அல்லது சித்திரவதைகளுக்குரிய வன்செயல்கள் கொண்ட காட்சிகள் அல்லது வீட்டு வன்முறைகள் மற்றும் பாலியல் உணர்வுகளை அதிகரிக்கச் செய்யக்கூடிய காட்சிகள் காண்பிக்கக் கூடாது.

1.8. திரைப்படங்களின் தொனிப்பொருள் / கதை வசனங்கள் / பாடல்கள், உரையாடல்கள் போன்றன இன மத பேதங்கள் இன்றி மற்றும் வேறு சமூகத்திற்கு எதிரான நோக்கங்களை குறித்துக் காட்டக்கூடியதான கருத்துக்களை கொண்டதாக இருக்கக்கூடாது என்பதுடன் அவ்வாறான சிந்தனைகளை உணர்த்தக்கூடியதாகவும் அமையக்கூடாது.

1.9. தாம் பிரதி நிதித்துவப்படுத்தும் இன மத கலாசார மற்றும் அரசியல் கொள்கைகளைக் காரணமாகக் கொண்டு எவரேனும் ஒரு நபர், நிறுவனம் அல்லது சமூகத்தின் ஒரு பகுதி சிரமத்திற்குட்படக்கூடிய வகையிலான விடயங்கள் உள்ளடக்கக் கூடாது.

1.10. எந்தளவு சிறந்த திரைப்படம் மற்றும் கலைசார் அம்சங்களைக் கொண்டதாக இருந்த போதிலும் காட்சிக்காக அனுமதி வழங்குவதன் மூலம் நிறுவனம் என்ற ரீதியில் கல்வி அமைச்சு சமூகத்தில் கருத்து முரன்பாடுகளுக்குட்படல் அல்லது விமர்சனங்களுக்குட்படுவதற்கு வாய்ப்புகள் கொண்ட உணர்வு பூர்வமாக சமூக அரசியல் விடயங்கள் கொண்டதான திரைப்படமாயின் அவ்வாறான ஆக்கங்களுக்காக கல்வி அமைச்சினால் பரிந்துரை வழங்கப்பட மாட்டாது.

2. பரிந்துரை செய்யப்பட்ட திரைப்படத்தை பாடசாலை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துவற்குரிய ஏனைய நிபந்தனைகள்

2.1. ஏதேனும் ஒரு திரைப்படம் பாடசாலை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக அனுமதி கோரப்படும் பட்சத்தில் உரிய ஆவணம் கொண்ட கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணபடிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். இத்திரைப்படம் மேற்கூறப்பட்ட தரங்களுக்கமைவானதா என்பது தொடர்பில் நிரல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டு உரிய துறைகள் தொடர்பில் போதியளவு அறிவு மற்றும் விளக்கம் கொண்ட வெளிநிபுனர்கள் மற்றும் கல்வி அமைச்சின் பிரதி நிதிகளைக் கொண்ட மதிப்பீட்டுக்குழு மூலம் பரிசீலனை செய்வது கட்டாயமானதாகும்.

2.2. 03 வெளி நிபுனர்கள் மற்றும் கல்வி அமைச்சின் இரு பிரதிநிதிகளைக் கொண்டமைந்துள்ளவாறு கல்வி அமைச்சின் செயலாளரினால் இவ் மதிப்பீட்டு குழு நியமிக்கப்படுவதுடன் இதன் தலைமைத்துவத்திற்கு மேற்கூறப்பட்ட 03 வெளி நிபுனர்கள் நியமிக்கப்படுவர். இச்சுற்றறிக்கையின் 1.1 தொடக்கம் 1.10 வரை குறிப்பிடப்பட்டுள்ள பண்புசார் தரம் தொடர்பிலான விளக்கமான அறிக்கையுடன் இத்திரைப்படம் பாடசாலை மாணவர்களுக்கு பார்வைக்குப் பொருத்தமானது என்ற பரிந்துரை இம்மதிப்பீட்டுக் குழுவினல் வழங்கப்படும்.

2.3. கல்வி அமைச்சின் கடமைப் பணிகளுக்குத் தடைகள் ஏற்படாதவாறு அவற்றுக்கு முன்னுரிமை வழங்கக்கூடியவாறு மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இதுவரையில் பொதுமக்கள் காட்சிக்காக வெளியிடப்படாத திரைப்படமாயின் உரிய மதிப்பீட்டுக் காட்சியினை கல்வி அமைச்சிற்குரிய வளாகத்தில் குழு முன்னிலையில் காட்சிபடுத்த வேண்டும்.

2.4. மதிப்பீட்டக்காக விண்ணப்பிக்கும் போது ஒரு திரைப்படத்திற்கு மீள் செலுத்தப்படாத ரூபா 30,000.00 நிதி கல்வி அமைச்சிற்கு வைப்பிலிட வேண்டும். இந்நிதி மதிப்பீட்டு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தும் வெளிநிபுணர்களின் ஆய்வுக் கட்டணங்களுக்காகச் செலவிடப்படும் இருப்பினும் இந்நிதியை அறவிடுவதற்கான காரணத்திற்கமைய திரைப்படத்திற்காக அனுமதி வழங்க கல்வி அமைச்சு கட்டுப்பட்டுள்ளதாக இதன் மூலம் கருதுவதில்லை என்பதுடன் அனுமதி வழங்கும் தீர்மானம் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கமையவே மேற்கொள்ளப்படும்.

2.5. தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டங்களுக்கமைய திரைப்படங்களை காட்சிப்படுத்துவது தொடர்பில் சட்ட ரீதியிலான அதிகாரம் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு இருப்பதனால் எக்கால எல்லையிலும் பாடசாலையில் திரைப்படக் காட்சியை நடாத்துவதற்காக கல்வி அமைச்சு அனுமதி வழங்காது.

2.6. பாடசாலையின் தலையீட்டுடன் பிள்ளைகளுக்கு அன்மித்த திரையரங்குகளில் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்படுவது பாடசாலை நேரத்திற்குப் பின்னர் மாத்திரம் என்பதாகும்.

3. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திரைப்படங்களை பிள்ளைகளுக்குப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்குவதற்குரிய ஏனைய நிபந்தனைகள்

3.1. கல்வித் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட இச்செயற்பாடுகளின் முழுமையான பொறுப்பு மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள் உரிய கல்லூரியின் அதிபர் மற்றும் அக்கல்லூரிக்குரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உரிய அக்கல்லூரிக்குரிய மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் பொறுப்பு வழங்கப்படும்.

3.2. பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பிலான பொறுப்பு உரிய கல்லூரியின் அதிபர் உள்ளிட்ட அதற்காகப் பயன்படுத்தும் ஏனைய ஆசிரியர்களுக்குப் பொறுப்பளிக்கப்படும்.

3.3. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கமைய பிள்ளைகளுக்கு காட்சிப் படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள அல்லது காட்சிப்படுத்துவற்காக பொருத்தமானது எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள திரைப்படம் தொடர்பான தகவல்களைச் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்படுவதுடன் தகவல்களை உரிய மதிப்பீட்டு பரிந்துரையுடன் www.moe.gov.ik என்ற இணையத்தள முகவரியில் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும்.

3.4. உரிய வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் முறையான அங்கீகாரக் கடிதமின்றி திரப்படங்களைக் காட்சிப்படுத்த ஏற்பாட்டாளர்கள் மற்றும் திரையரங்குகளில் ஆவணங்கள் அல்லது அழைப்பிற்கமைய நடவடிக்கை எடுப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

3.5. அனுமதி வழங்கப்பட்ட திரைப்படங்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் சமர்ப்பிக்கப்படுவதாயின் உரிய விடயங்களை ஆராய்ந்து எந்த சந்தர்ப்பங்களிலும் உடனடியாக அவ் அனுமதியினை இரத்து செய்ய முடியும்.

3.6. இது தொடர்பான பாடசாலைக்குரிய சுற்றறிக்கை, சட்ட ஒழுங்குகள், பிரமானக் குறிப்பு மற்றும் நிதி ஒழுங்கு விதிமுறைகள் எதும் மீறாது இருக்க வேண்டும்.

3.7. அனுமதிப்பத்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக பெற்றோர்கள் மற்றும் மாணவர்களை வற்புறுத்துவது தடை செய்யப்பட்டதானும். மேலும் பெற்றோரின் இணக்கமின்றி பாடசாலையினால் பிள்ளைகளை பங்கேற்கச் செய்யக்கூடாது.

3.8. வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் மிகுந்த நியாயமான சலுகை விலையில் அனுமதிப்பத்திரத்திற்கு அறவிட வேண்டியதுடன் அது அத்திரையரங்குக்குரிய கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.9. நிரல் கல்வி அமைச்சின் மதிப்பீட்டுக் குழுவின் பொருத்தமான பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரத்துடன் "பாடசாலைக் காட்சி" என ஆரம்பக் கூட்டப் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்வது முற்காகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஏதேனும் கல்வி வலயத்தின் பாடசாலைக்கு அண்மையில் "பாடசாலைக் காட்சி" என பிரச்சாரப் பணிகளில் மேற்கொள்ள முடிந்தபோதிலும் மேற்கூறப்பட்ட பரிந்துரையைப் போன்று உரிய வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்திற்கமைய இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.10. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்குட்படாத "பாடசாலைக் காட்சி" என தமது பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளும் எந்தவொரு திரைப்படத்தையும் காட்சிக்காக பாடசாலைக்கு என தமது பிள்ளைகளை பங்கேற்கச் செய்வது தடைசெய்யப்பட்டதாகும்.

3.11. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகளை மீறக்கூடிய வகையில் எவரேனும் ஒருவர் செயற்படுவதாயின் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்

இச்சுற்றறிக்கைக்கு உட்படாத எதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நிரல் அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

**டப்ளியு.எம்.பந்துசேன**
செயலாளர்
கல்வி அமைச்சு